514-ல் 25 பணியிடங்களும் காலியாக உள்ளன. இதில் 3 பணியிடங்களை ஆசிரியர் தேர்வு வாரியம் மூலமும், 22 பணியிடங்களைப் பதவி உயர்வு மூலமும் நிரப்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதேபோல் இளங்கலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் 832-ல் 88 பணியிடங்கள் காலியாக உள்ளன. இதில் 44 பணியிடங்களை ஆசிரியர் தேர்வு வாரியம் மூலமும் 44 பணியிடங்களைப் பதவி உயர்வு மூலமும் நிரப்பிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இடைநிலை ஆசிரியர் பணியிடங்கள் 5,200-ல் 625 பணியிடங்கள் காலியாக உள்ளன. ஓர் ஆசிரியருக்கு 40 மாணவர்கள் என்ற விகிதத்தில், தேவைப்படும் இடைநிலை ஆசிரியர் பணியிடங்களைக் கொண்டு கணக்கிட்டு, நிரவல் மூலம், அதாவது அதிகப்படியாக உள்ள ஆசிரியர்களை, ஆசிரியர்கள் குறைவாக உள்ள இடங்களுக்கு மாற்றம் செய்து அதன்படி கண்டறியப்படும் காலிப் பணியிடங்களை வேலைவாய்ப்பகம் மூலம் நிரப்ப உரிய நடவடிக்கை மேற்கொள்ள நியமன அலுவலர்களான மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

முற்பகல் 10-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இரா. திருமாவளவன்.

திரு. இரா. திருமாவளவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் நலத் துறையின்கீழ் இயங்குகிற பள்ளிகளை கல்வித் துறையின்கீழ் இயங்குகிற பள்ளிகளாக மாற்றிட அரசிடம் திட்டம் இருக்கிறதா என மீண்டும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபோல் தற்போது திட்டம் எதுவும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செ.கு. தமிழரசன்.

திரு. செ.கு. தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசால் நடத்தப்பட்டு வருகிற ஆதிதிராவிடர் நல உயர்நிலைப் பள்ளிகள், தொடக்கப் பள்ளிகளில் பணி நியமனம் செய்யப்படுகிறபோது, ஆதிதிராவிடர் சமுதாயத்தைச் சேர்ந்த ஆசிரியர்களையே போட்டு நிரப்பப்பட வேண்டும் என்கிற ஒரு மரபு இருந்தது. அதுவே தொன்றுதொட்டு 40 ஆண்டுகாலத்திற்கு மேலே நடைமுறையில் இருந்தது. ஆனால், கடந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு அதை மாற்றி விட்டார்கள். ஆசிரியர் தேர்வு வாரியத்திலிருந்து தேர்ந்து

2003 மார்ச் 31]

எடுக்கப்படுகிறவர்களை நியமிக்கலாம், அதிலே பொதுவாக யார் வேண்டுமானாலும் வந்து பங்கேற்கலாம் என்று மரபை மாற்றி அமைத்துவிட்டார்கள். ஆகவே, மீண்டும் ஆதிதிராவிடர் நலத் தொடக்கப் பள்ளி, உயர்நிலைப் பள்ளிகளில் ஆதிதிராவிடர் சமுதாயத்தைச் சேர்ந்த ஆசிரியர்களைக்கொண்டு பணி நியமனம் செய்யப்படுகிற வகையிலே அந்தத் திருத்தம் மாற்றியமைக்கப்படுமா என அமைச்சரிடமிருந்து தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆசிரியர்கள் பணியிடங்கள் தற்போது ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம்தான் நிரப்பப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், இருக்கையில் இல்லை.

வினா எண் 150, திரு. கே.கே. உமாதேவன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

150—

சொகுசுப் பேருந்து

***9680—திரு. கே.கே. உமாதேவன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூரிலிருந்து சிங்கம்புனரி வழியாக சென்னைக்கு சொகுசுப் பேருந்து இயக்க தமிழ்நாடு அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் திருப்பத்தூரிலிருந்து சென்னைக்கு சிங்கம்புனரி வழியாக சொகுசுப் பேருந்து இயக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே.கே. உமாதேவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்களை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS